திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2009–10 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.1 கோடியே 70 இலட்சமாக உயர்த்துதல்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.90** **நாள்:11.8.2009.**

படிக்கப்பட்டவை:

அரசு ஆணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.7.2009.

------

**ஆணை:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997–98ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு தொகுதி ஒன்றுக்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியாக வழங்கப்பட்டது. பின்னர் இத்தொகை படிப்படியாக அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்தது. 2008–09ம் ஆண்டில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ரூ.1 கோடியே 50 இலட்சம் வீதம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 21.7.2009 அன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2009–2010ஆம் ஆண்டு முதல் ரூ.1.50 கோடியிலிருந்து ரூ.1.70 கோடியாக உயர்த்தி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

3) அதன்படி அரசு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2009–2010ஆம் ஆண்டு முதல் ரூ.1,50,00,000/– லிருந்து (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சம்) ரூ.1,70,00,000/–ஆக (ரூபாய் ஒரு கோடியே எழுபது லட்சம்) உயர்த்தப்படுகிறது.

(ii) தற்போது உயர்த்தப்பட்ட ஒதுக்கீடான ரூ.1,70,00,000/–ல் (ரூபாய் ஒரு கோடியே எழுபது லட்சம்) கட்டாய பணிகளை மேற்கொள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.85,00,000/–ஐ (ரூபாய் எண்பத்தைந்து லட்சம் மட்டும்) வரையறுக்கப்பட்ட நிதியாகவும், மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.85,00,000/–ஐ (ரூபாய் எண்பத்தைந்து லட்சம் மட்டும்) வரையறுக்கப்படாத நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(iii) மேலே பத்தி 3(ii)ல் உள்ள மாறுதலைத் தவிர, அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009ல் வெளியிடப்பட்ட 2009–2010 ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் வேறு மாறுதல்கள் இல்லை. அதன்படி 2009–2010ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த வேண்டும்.

4) இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களில் பற்று வைக்கப்படும்:

**(80ரூ செலவினம்)**

(i) 4515–00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 – ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JF சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 – பெரும் பணிகள். (குதொகு.4515 00 800 JF 1602)

**(20ரூ செலவினம்)**

(ii) 4515–00–ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக்கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JB – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும்பணிகள். (குதொகு.4515 00 789 JB 1606)

5) தற்போது ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.1.50 கோடியிலிருந்து ரூ.1.70 கோடியாக (ரூபாய் ஒரு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) உயர்த்தப்பட்டுள்ளதால், இத்திட்டத்திற்கு 2009–10ஆம் ஆண்டிற்கு ரூ.47,00,00,000/– (ரூபாய் நாற்பத்து ஏழு கோடி மட்டும்) தொகை கூடுதலாக நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இக்கூடுதல் செலவினம் 2009–10இன் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். இச்செலவினத்திற்கான நிதியொதுக்கீடு 2009–10இன் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட நிதியொதுக்கீட்டினை 2009–10ன் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளத் தேவையான விளக்கக் குறிப்பு மற்றும் வரவு செலவு திட்ட கருத்துருக்களை அரசின் நிதித்துறைக்கு உரிய தருணத்தில் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 45748/ஊ.வ./09, நாள் 10.8.2009ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 527. (ஐநூற்று இருபத்தி ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன் மார்டி,**
அரசு செயலாளர் (பொறுப்பு)